**செ. கு. எண்: 130** **நாள்: 28.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 28.7.2020

அகில இந்திய என். ஆர் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், புதுச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு.பாலன் அவர்கள் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இன்று (28.7.2020) அதிகாலை காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனைஅடைந்தேன்.

திரு. பாலன் அவர்கள் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும், பாப்ஸ்க்கோ மற்றும் AFT பஞ்சாலை தலைவராகவும் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, புதுச்சேரி மக்களின் நலன்களுக்காக உழைத்தவர். புதுவை மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

திரு. பாலன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**